# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
**TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY**
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Karapakkam, Chennai - 600 097
Website: www.tnteu.ac.in


**Lr.No.TNTEU/COE/2021/338** **Date: 21.06.2021**


**Dr.M.Govindan, Ph.D.,**
Controller of Examinations i/c


## மாணாக்கருக்கான இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்

## (STUDENTS GUIDELINES FOR ONLINE EXAMINATIONS)

**(B.Ed./B.Ed.(Spl.Edn.)/M.Ed./M.Ed.(Spl.Edn.)/B.Sc.B.Ed.(Semester & Non-Semester) and B.A.B.Ed.(Semester) Degree Examinations, June/July 2021)**

இணையவழியில் தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் அனைவரையும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்.

தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கருக்கு B.Ed. / B.Ed. (Spl. Edn.) / M.Ed. / M.Ed. (Spl.Edn.) தேர்வுகள் **28.06.2021 முதல் 05.07.2021** வரையிலும், B.Sc.B.Ed. 2016-2017 (I Year, II Year, III Year & IV Year Non-Semester Arrear Papers) தேர்வுகள் **28.06.2021 முதல் 15.07.2021** வரையிலும் B.Sc.B.Ed. 2017-2018 (VIII Semester including arrears), 2018-2019 (VI Semester including arrear), 2019-2020 (IV Semester including arrear), 2020-2021 (II Semester) தேர்வுகள் **28.06.2021 முதல் 09.07.2021** வரையிலும் மற்றும் B.A.B.Ed. 2019-2020 (IV Semester) & 2020-2021 (II Semester) தேர்வுகள் **28.06.2021 முதல் 05.07.2021** வரையிலும் இணைய வழியில் நடைபெற உள்ளது.

**மாணாக்கர்கள் பின்பற்றவேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்:**

1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் உள்ள தேர்வு அட்டவணைப்படி, தேர்விற்கு தயாராகுமாறு மாணாக்கர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. இணையவழித் தேர்வில் (Online Examination) தங்குதடையின்றி பங்குகொள்வதற்கு தேவையான Internet Facility, Smart Phone / Tab / Laptop / Desktop (Computer), மற்றும் இதர உபகரணங்களை மாணாக்கர் முன்னரே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

3. மாணாக்கர், தேர்வு எழுதுவதற்கு தேவையான, தரமான A4 Size வெள்ளைத் தாட்களை, தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்பே போதிய அளவில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாணாக்கர் தேர்வின் பொழுது கருப்புநிற பந்துமுனை பேனாவினை (Black ballpoint pen) பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. மாணாக்கர், ஒவ்வொரு தேர்வினையும் 40 பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. மாணாக்கர், கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட விடைத்தாளின் முகப்பு பகுதியை (Front Page) அனைத்துத் தேர்வுகளுக்கும் தேவையான பிரதியெடுத்துகொண்டு அதனை முழுமையாக பூர்த்தி செய்து, ஒவ்வொரு தேர்வு விடைத்தாளின் முகப்பு பகுதியாக இணைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

6. மாணாக்கர் ஒவ்வொருவரும், மின்னஞ்சல் முகவரி (E-mail ID) மற்றும் Whatsapp எண்ணை தேர்வு தொடர்பான செய்திகளை பகிர்ந்து கொள்வதற்காக, தங்கள் கல்லூரி முதல்வருக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

7. மாணாக்கர், இணையவழித் தேர்வினை எந்தவித தடங்கலுமின்றி எழுதுவதற்கு, ஓர் மாதிரித் தேர்வினை (Mock Test) மின்னஞ்சல் மற்றும் Whatsapp செயலியைப் பயன்படுத்தி கல்லூரி முதல்வர் அறிவிக்கும் தேதியில் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. இணையவழித் தேர்வுக்கான மாதிரித்தேர்வினை (Mock Test) எழுதும் பொழுது, கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நேரத்தில் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

9. மாணாக்கர், மாதிரித்தேர்வு எழுதும் பொழுது கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட முகப்பு பக்கத்தை (Front Page) முழுமையாக பூர்த்தி செய்யவும் ஒவ்வொரு பக்கத்திற்கும் பக்க எண் வலதுபுற மேற்பக்கத்தில் (Topmost right corner) குறிக்கவும், ஒவ்வொரு பக்கத்தின் வலதுபுற அடிப்பகுதியில் (Bottom of the right corner) கையெழுத்திடவும் மற்றும் விடைத்தாளை Scan செய்து PDF வடிவில் கல்லூரி முதல்வருக்கு அனுப்புவது போன்ற செயல்களுக்கு முறையான பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

10. பல்கலைக்கழகம் வழங்கும் தேர்விற்கான அனுமதிச்சீட்டினை (Hall Ticket) கல்லூரி முதல்வரிடமிருந்து மாணாக்கர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

11. அரசு உத்தரவின்படி, மாணாக்கர் தேர்வு எழுதுவதற்காக கல்லூரிக்கு நேரடியாக செல்லக்கூடாது என்று அறிவுறுத்துகிறோம்.

12. பார்வைத்திறன் குறைபாடுள்ள (Visually Impaired) மாணாக்கருக்கு அரசு மற்றும் பல்கலைக்கழக விதியின்படி தேர்வு எழுத கூடுதல் நேரம் அளிப்பதுடன், அவர்களுக்குரிய Scribe உட்பட அனைத்து உதவிகளையும் கல்லூரி முதல்வர் ஏற்பாடு செய்வார். இல்லையெனில் மாணாக்கர்கள் அவர்களுக்குரிய Scribe-ஐ ஏற்பாடு செய்து அதனை கல்லூரி முதல்வருக்கு அனுப்பி முன் அனுமதி பெற வேண்டும்.

13. மாணாக்கர், தங்களுடைய காலைத் தேர்வின் (Forenoon Session) வருகையை 9.30 மணி முதல் 10.00 மணிக்குள்ளாகவும் பிற்பகல் (Afternoon Session) வருகையை 1.30 மணி முதல் 02.00 மணிக்குள்ளாகவும் (Name, Register No., Present) என்று Type செய்து Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்க வேண்டும்.

14. ஒவ்வொரு தேர்வன்றும், கல்லூரி முதல்வர் மின்னஞ்சல் /புலனச்செயலி (Mail/Whatsapp) மூலமாக தேர்வு தொடங்கும் நேரத்திற்கு, 30 நிமிடங்களுக்கு முன்பு வினாத்தாளை மாணாக்கருக்கு அனுப்புவார் என தெரிவித்துக்கொள்கிறோம்.

15. மாணாக்கர், கல்லூரி முதல்வரிடமிருந்து தேர்வு நாளன்று வினாத்தாள் கிடைக்கப்பெற்றவுடன் Question Paper Received என்ற தகவலை Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

16. மாணாக்கர், ஒவ்வொரு தேர்விற்குரிய காலத்திற்குள் தேர்வினை எழுதி முடிக்கவேண்டும். அத்துடன் தேர்வு முடிந்த நேரத்திலிருந்து, அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் அத்தேர்விற்குரிய விடைத்தாள்களை Scan செய்து File Name-ஆக உங்கள் Register Number_Subject Code (Eg:1010119BD001_SBCA) என்று Save செய்து கல்லூரி முதல்வருக்கு உடனடியாக மின்னஞ்சல் (E-mail) / புலனச்செயலி (Whatsapp) மூலமாக PDF Format-ல் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பின்னர் Name, Register No., Answer Sheets Sent என்ற தகவலை Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்க வேண்டும்.

17. மாணாக்கர், தங்களுடைய அனைத்து விடைத்தாட்களையும் தரமான உறையில் வைத்து தேர்வின் இறுதி நாள் அல்லது மறுநாளுக்குள் கல்லூரி முதல்வருக்கு, விரைவுத் தபால் /பதிவுத் தபால் (Speed Post/ Registered Post) மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

18. **தமிழ்நாடு அரசின் கொரோனா விழிப்புணர்வு வழிகாட்டு நெறிமுறைகளை கட்டாயம் பின்பற்றி, இவ்விணையவழித் தேர்வினை எழுதுமாறு மாணாக்கர்களை கேட்டுக்கொள்கிறோம்.**

M. [signature] 21.6.2021

**CONTROLLER OF EXAMINATIONS i/c**